IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | | 69/2018 |
| | | D/W's | | **DW1** |
| | | | | |
| NAME | மு. சங்கர் சணேஷ் | CASTE | | |
| S/O | முனியப்பன் | RELIGION | | **இந்து** |
| VILLAGE | பாலமேடு கிராமம் | CALLING | | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | | **41** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 01.09.2025**

**குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு வாதி வழக்குத்தாக்கல் செய்துள்ளார் என்று எனக்குத்தெரியும். எனது சொத்தின் சர்வே எண்ணும், வாதியின் சொத்தான வழக்குச்சொத்தின் சர்வே எண்ணும் வேறு வேறு என்றால் சரிதான். வாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண்ணைத்தான் வழக்குச்சொத்தாக காண்பித்துள்ளார் என்றால் வாதிக்கு சொந்தமான ஒரு சர்வே எண்ணை மட்டும்தான் வழக்கில் காண்பித்துள்ளார், மற்றொரு சர்வே எண்ணை வழக்கில் சேர்க்கவில்லை. வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 2 உள்ளது என்றால் சரிதான்.

2. வழக்குரையையும் அதில் உள்ள சொத்து விவரத்தையும் முழுவதுமாக படித்துப்பார்த்தேன். வாதிகள் நான் அவர்களது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்ட முயற்சி செய்தபோது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு முதலில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றாலும் அதன்பிறகு நான் வீடு கட்டியுள்ளதால் ஆக்கிரமிப்பை அகற்றக்கேட்டு பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் எனது சொத்தை கிரையம் பெறுவதற்குமுன்பே வாதி அவரது சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

3. வாதி அவரது இடத்தை காலியிடமாக வைத்துள்ளார் என்றால் சரியல்ல, பேஸ்மட்டம் மட்டும் போட்டுள்ளார். நான் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை வாதிக்கு பாத்தியமான இடம் என்று விளம்புகை பரிகாரம் வழக்கில் கேட்கப்பட்டுள்ள விவரம் எனக்குத்தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1, 2 வாதியின் கிரையப்பத்திரத்தைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் அந்த

ஆவணங்கள் பற்றி எனக்குத்தெரியாது. வாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்குத்தெரியுமா என்றால் எனக்குத்தெரியாது.

4. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் 9 வரையுள்ள ஆவணங்களுக்கும், வழக்குச்சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். எனது சொத்து சம்பந்தமாக இதுவரை நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தை அளக்க வந்தபோது நான் ஆட்சேபணை தெரிவித்தேன் என்றால் சரிதான், எனது ஆட்சேபணையை நீதிமன்ற ஆணையரிடம் மனுவாக கொடுத்தேன். வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் அளந்தபோது எனது ஆட்சேபணைகளை மனுவாக கொடுக்காமல், மனு கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை படித்துப்பார்த்தேன். நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலுள்ள பட்டாவை நான் பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் அதனுடன் உள்ள ஆவணங்களை பார்வையிடாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சரியாக வழக்குச்சொத்தை அளக்கவில்லை என்று ஆட்சேபணை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தனியாக நீதிமன்ற ஆணையர் வைத்து அளவீடு செய்ய மனு தாக்கல் செய்தேன். நான் சொல்வதுபோது மனு எதுவும் தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நீதிமன்ற ஆணையர் சரியாக அளவீடு செய்து என்னுடைய ஆக்கிரமிப்பை உறுதி செய்துள்ளார் என்றாலும் நான் தவறாக ஆட்சேபணை செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது இடத்திற்கு வடபுரமும், வாதியின் இடத்திற்கு தெற்குப்புரமும் சந்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 பத்திரத்தின் சொத்து விவரத்தில் வடபுரம் சாந்தி காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பத்திரம் பதிந்த தினத்தில் நான் வாங்கிய சொத்தை சுற்றி யாருடைய இடங்கள் இருந்தது என்று எனக்குத்தெரியாது.

7. வாதியின் சொத்திற்கு தென்புரம் எந்த சந்தும் கிடையாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகளின் தரப்பின் ஆவணங்கள் படி வாதியின் சொத்திற்கு தென்புரம் சந்து இருப்பதாக புலப்படாது என்றால் சரியல்ல. வாதியின் சொத்தில் நான் 3 அடி அகலம்

32 அடி நீளமுள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது தவறாக உள்ளது. நீதிமன்ற ஆணையர் வருவாய்துறை ஆவணங்கள்படியும், வாதியின் ஆவணங்கள்படியும்தான் அளவீடு செய்தார் என்றால் சரியல்ல.

8. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது ஒப்புக்கொண்டு தற்போது ஆட்சேபணை செய்வது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலமும், எனது தரப்பு ஆவணங்களும் வழக்கிற்கு சம்பந்தமில்லாதவை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் எனது கோரிக்கையின்படி எனது சொத்தையும் அளந்து காண்பித்தார் என்றாலும் அதன்படியும் ஆக்கிரமிப்பு இருந்தது என்றாலும் சரியல்ல. வாதி CRPF இல் பணிபுரியும் விவரம் எனக்குத்தெரியும், வாதி நான் வீடு கட்டிய காலத்தில் எனது ஊரில்தான் இருந்தார்.

9. நான் வீடு கட்ட ஆரம்பித்த சமயத்தில் வாதி ஆட்சேபணை செய்து போலிசாரிடம் புகார் மனு கொடுத்தார் என்றால் வாதி பல புகார்கள் கொடுத்துள்ளார், ஆனால் போலிசார் CSR போடவில்லை, போலிசார் வீடு கட்டிய இடத்தை வந்து பார்வையிட்டு சென்றார்கள். நான் ஆக்கிரமிப்பை அகற்றி வாதியிடம் சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்று பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல, நான் எனது பட்டாபடி உள்ள இடத்தில்தான் வீடு கட்டியுள்ளேன்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி